யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகம்

இரண்டாம் தவணைப் பரீட்சை – 2019

| தரம் : 06 | குடியியற்கல்வி<br>சுட்டெண் : ........................................................ | நேரம் :<br>2.00 மணித்தியாலம் |
|---|---|---|

## பகுதி - I

**பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

01. பாடசாலையின் வரலாற்றினை அறிய உதவும் மூலாதாரம்
    1) தினவரவு இடாப்பு
    2) சம்பவத் திரட்டுப் புத்தகம்
    3) பாடப்பதிவுப் புத்தகம்
    4) பாடசாலை ஆண்டு விழா மலர்

02. பாடசாலையில் கல்விச் செயற்பாட்டின் தலைவராகச் செயற்படுபவர்
    1) அதிபர்
    2) ஆசிரியர்
    3) பிரதி அதிபர்
    4) உபஅதிபர்

03. இலவசக் கல்வியின் தந்தை என அழைக்கப்படுபவர்
    1) சேனகபிபிலே
    2) C.W.W. கன்னங்கர
    3) D.S. சேனநாயக்க
    4) பெரேரா

04. ஒருவரின் பலவீனமாகக் காணப்படுவது
    1) பொறுமை
    2) உண்மை பேசுதல்.
    3) பிறருக்கு உதவுதல்.
    4) கோபப்படுதல்

05. திட்டமிட்டுச் செயற்படுவதால் கிடைக்கும் நன்மை
    1) வேலைகள் இலகுவாகும்.
    2) பதற்றம் அதிகரிக்கும்.
    3) மகிழ்ச்சி ஏற்படாது.
    4) நேரம் போதாமல் இருத்தல்.

06. மாணவர்கள் தொடர்பாகப் பாடசாலையில் காணப்படுகின்ற பொதுவான சட்டதிட்டங்களில் ஒன்று
    1) குறிப்பிட்ட சீருடையில் சமூகமளிக்காமை.
    2) தலைமைத்துவத்திற்குக் கீழ்ப்படியாமை.
    3) பாடசாலையில் உள்ள சம்பிரதாயங்களைப் பின்பற்றாமை.
    4) பாடசாலைக்குத் தினமும் சமூகமளித்தல்.

07. பாடசாலைக் கீதம் இசைக்கப்படும் போது கடைப்பிடிக்க வேண்டியது
    1) பாடசாலைக் கீதத்தைத் தான் விரும்பியவாறு பாடுதல்.
    2) விருப்பமான முறையில் நின்று பாடுதல்.
    3) பாடசாலைக் கீதத்திற்கு மதிப்பளிக்கும் வகையில் பாடுதல்.
    4) கீதம் பாடும் போது தனது வேலைகளில் ஈடுபடுதல்.

08. பாடசாலை மூலம் சமூகத்திற்கு ஆற்றப்படும் பணிகளில் ஒன்று
    1) நற்பிரசைகளை உருவாக்குதல்.
    2) எதிர்காலத்திற்கான நல்ல தலைவர்களை உருவாக்காமை.
    3) சமூகத்திற்குத் தகவல்களை வழங்காமை.
    4) வாழ்க்கையை நடத்துவதற்குரிய வழிகாட்டல்களை வழங்காது விடல்.

09. பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் தலைவராகச் செயற்படுபவர்
    1) பெற்றோர்
    2) அதிபர்
    3) வலயக் கல்விப் பணிப்பாளர்
    4) ஆசிரியர்



kalvi.lk

10. உமது பாடசாலை அமைந்துள்ள மாகாணம் எது?
1) தென் மாகாணம்
2) மேல் மாகாணம்
3) வட மாகாணம்
4) மத்திய மாகாணம்

11. பல பிரதேச செயலர் பிரிவுகள் ஒன்றிணைவதன் மூலம் உருவாகும் நிர்வாக அலகு
1) மாவட்டம்
2) மாகாணம்
3) கிராம உத்தியோகத்தர் பிரிவு
4) மாகாண சபை

12. மேல் மாகாணத்தில் உள்ளடங்கும் மாவட்டங்களில் ஒன்று
1) மன்னார்
2) கொழும்பு
3) காலி
4) பொலன்னறுவை

13. எமது நாட்டின் மிகச் சிறிய நிர்வாக அலகு
1) கிராம உத்தியோகத்தர் பிரிவு
2) பிரதேச செயலர் பிரிவு
3) நகர சபை
4) மாநகர சபை

14. பின்வருவனவற்றில் செயற்கை வளம் எது?
1) நீர் வீழ்ச்சி
2) சமவெளி
3) கட்டடங்கள்
4) காடுகள்

15. குறித்த சில பிரதேசங்களுக்குரியனவாகக் காணப்படும் வளம்
1) காற்று
2) சூரிய ஒளி
3) நிலம்
4) கனிய வளம்

16. கிராம மக்களின் வதிவிடத்தை உறுதிப்படுத்தல், அரசாங்கத்தால் வழங்கப்படும் உதவிப் பணத்தை விநியோகித்தல் போன்ற பணிகளை ஆற்றுபவர்.
1) கிராம சேவை உத்தியோகத்தர்
2) தபால் நிலைய அதிகாரி
3) வங்கி முகாமையாளர்
4) சமூக சேவை உத்தியோகத்தர்

17. பிறப்புச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ள உதவும் நிறுவனம்
1) பிரதேச செயலாளர் காரியாலயம்
2) மாநகர சபை
3) நகர சபை
4) வைத்தியசாலை

18. மாநகர சபையின் பொறுப்பாளருக்கு வழங்கப்படும் பெயர்
1) தவிசாளர்
2) நகர பிதா
3) மாவட்டச் செயலர்
4) பிரதேச செயலர்

19. பொருட்களின் மலிவு விற்பனை, விவசாயப் பொருட்களை வாங்கி விற்றல் போன்ற சேவைகளை வழங்கும் அமைப்பு
1) மீனவர் சங்கம்
2) கிராம அபிவிருத்திச் சங்கம்
3) கமத்தொழில் சங்கம்
4) கூட்டுறவுச்சங்கம்

20. பிரதேச மக்களின் சுகாதாரப் பாதுகாப்பிற்காக 24 மணிநேரமும் சேவை வழங்கும் பிரதான நிறுவனம்
1) வைத்தியசாலை
2) கூட்டுறவுச்சங்கம்
3) பிரதேசசபை
4) நகர சபை

( 20 × 2 = 40 புள்ளிகள்)


kalvi.lk

## பகுதி - II

முதலாம் வினா உட்பட, ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

01. 1) இரண்டாம் தவணையில் நீர் செய்த கணிப்பீட்டின் வகையினை எழுதுக. (02 புள்ளிகள்)

2) இக்கணிப்பீட்டினை மேற்கொண்ட பாட அலகு எது? (02 புள்ளிகள்)

3) கணிப்பீட்டினை மேற்கொள்ள நீர் பயன்படுத்திய தரஉள்ளீட்டுப் பொருட்கள் நான்கு தருக. (04 புள்ளிகள்)

4) கணிப்பீட்டிற்காகத் தகவல் திரட்டிய வழிகள் நான்கு தருக. (04 புள்ளிகள்)

02. 1) பாடசாலையின் வரலாற்றினை அறிய உதவும் மூலாதாரங்கள் மூன்று தருக. (03 புள்ளிகள்)

2) பாடசாலை ஒழுங்கமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் நபர்கள் மூவரை எழுதுக. (03 புள்ளிகள்)

3) பாடசாலை அதிபரின் கடமைகள் மூன்று தருக. (03 புள்ளிகள்)

4) மாணவர்களின் கடமைகள் மூன்றினைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

03. 1) ஒருவரிடம் காணப்படும் சிறந்த நற்பண்புகள் மூன்று தருக. (03 புள்ளிகள்)

2) ஒருவரிடம் காணப்படும் பலவீனங்கள் மூன்றினைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

3) திட்டமிட்டுச் செயற்படுவதால் கிடைக்கும் நன்மைகள் மூன்று தருக. (03 புள்ளிகள்)

4) பாடசாலையில் திட்டமிட்டு மேற்கொள்ளும் செயற்பாடுகள் மூன்று தருக. (03 புள்ளிகள்)

04. 1) பாடசாலையின் தனித்துவத்தை எடுத்து விளக்கும் விடயங்கள் மூன்று தருக. (03 புள்ளிகள்)

2) பாடசாலை இலச்சினை பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் மூன்று தருக. (03 புள்ளிகள்)

3) பாடசாலைக் கீதம் இசைக்கப்படும் சந்தர்ப்பங்கள் மூன்றினைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

4) பாடசாலைச் சமூகத்தின் உறுப்பினர் என்ற வகையில் உமக்குரிய உரிமைகள் மூன்று தருக. (03 புள்ளிகள்)

05. 1) இலங்கையின் நிர்வாக அலகுகள் மூன்றினைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

2) வடமாகாணத்தில் உள்ளடங்கும் மாவட்டங்கள் மூன்றினைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

3) எமது பிரதேசத்தில் காணப்படும் இயற்கை வளங்கள் மூன்றினை எழுதுக. (03 புள்ளிகள்)

4) நிலத்தின் பயன்பாடுகள் மூன்று தருக. (03 புள்ளிகள்)

06. 1) எமக்கு உதவி புரியும் நிறுவனங்கள் மூன்று தருக. (03 புள்ளிகள்)

2) உள்ளூராட்சி நிறுவனங்கள் மூன்றினையும் எழுதுக. (03 புள்ளிகள்)

3) சமய வழிபாட்டுத் தலங்களால் ஆற்றப்படும் பணிகள் மூன்று தருக. (03 புள்ளிகள்)

4) எமது பிரதேசத்தில் காணப்படும் சமய வழிபாட்டுத் தலங்கள் மூன்றினைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)



kalvi.lk

kalvi.lk

தரம் 01 - 10

# 3ம் தவணை

## REVISION | PAPER DISCUSSION

**ஆரம்பம் - 01.12.2024**

மீட்டல் மற்றும் வினாத்தாள் கலந்துரையாடல் வகுப்புகள்

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் இணைந்து கொள்ள முடியும்.

JOIN NOW

**புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன..**

### கட்டண விபரங்கள்

**தமிழ் Medium**

| | |
|---|---|
| தரம் 01-02 | 2000/= |
| தரம் 03-05 | 2500/= |
| தரம் 06-10 | 3000/= |

**English Medium**

| | |
|---|---|
| தரம் 06-07 | 3500/= |

Education கல்வி

KALVI.LK

WHATSAPP

075 287 1457